


திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வெள்ளியூர் ஊராட்சியில் ரேக்ளா குதிரை வெள்ளோட்டம் விழா ஒன்றிய செயலாளர் டி.முரளிகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொடியசைத்து தொடங்கி வைத்து போட்டிகளில் வென்ற குதிரைகளின் உரிமையாளர்களுக்கு ரொக்கப் பரிசும், கோப்பையும் வழங்கப்பட்டது உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, எஸ்.ஜெயபாலன், சே.பிரேம்ஆனந்த், என்.இ.கே.மூர்த்தி, எம். பர்கத்துல்லாகான், டி.தென்னவன், டி.மனோகரன், மதுரை வீரன், டி.பிராங்கிளின், விமலா குமார், ஈக்காடு வேலு, ஈக்காடு முகமது ரஃபி, ரேக்ளா குதிரை வளர்ப்போர் நலச்சங்கம் தலைவர் ஜி.ஆர்.ரவீந்திர பாபு, சங்கீதா சீனிவாசன், கபிலன், வி.ஜெ.உமா மகேஸ்வரன், அரிகிருஷ்ணன், சந்தோஷ், குமார், பி.கே.இ.நாகராஜ், உள்படபட பலர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் – துணை முதல்வர் பிறந்த நாளையொட்டி

# ரேக்ளா குதிரை பந்தயப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜன.26:

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வெள்ளியூர் ஊராட்சியில் ரேக்ளா குதிரை வெள்ளோட்டம் விழா நடைபெற்றது.

விழாவிற்கு ஒன்றிய செயலாளர் டி.முரளிகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் எம். பர்கத்துல்லாகான், டி.தென்னவன், டி.மனோகரன், மதுரை வீரன், டி.பிராங்கிளின், விமலா குமார், ஈக்காடு வேலு, ஈக்காடு முகமது ரஃபி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான ஆவடி சாமு.நாசர், பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் ரேக்ளா குதிரை வெள்ளோட்டம் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

ரேக்ளா வெள்ளோட்டத்தில் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம் செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 70 க்கும் மேற்பட்ட குதிரைகள் பங்கேற்றன. இந்நிலையில் 3 பிரிவுகளாக நடத்தப்பட்ட வெள்ளோட்டத்தில் சிறிய குதிரைகள் 45 முதல் 46 வரை அங்குல உயர குதிரைகளுக்கு 12 மைல் தொலைவும், 47 முதல் 48 வரை அங்குல உயர குதிரைகளுக்கு 14 மைல் தொலைவும், பெரிய குதிரைகளுக்கு 16 மைல் தொலைவும் இலக்காக வைக்கப்பட்டிருந்தன. போட்டிகள் தொடங்கியதும் குதிரைகள் இலக்கை நோக்கி சீறிப்பாய்ந்து ஓட தொடங்கின. போட்டிகளில் வென்ற குதிரைகளின் உரிமையாளர்களுக்கு ரொக்கப் பரிசும், கோப்பையும் வழங்கப்பட்டது.

இதில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜெயபாலன், திருவள்ளூர் மாவட்ட ரேக்ளா குதிரை வளர்ப்போர் நலச்சங்கம் தலைவர் ஜி.ஆர். ரவீந்திர பாபு.

திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த், திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சங்கீதா சீனிவாசன், கபிலன், உமா மகேஸ்வரன், அரிகிருஷ்ணன், சந்தோஷ், குமார், நாகராஜ், வேலு, பலராமன், சஞ்சய், சூர்யா, சதீஷ், நேதாஜி, ராஜ்மோகன், அஜித் குமார், கன்னியப்பன், மூர்த்தி, யுவராணி, சர்தார், லோகேஷ், ஏழுமலை, வெங்கடேசன், சுரேஷ், கிருஷ்ணமூர்த்தி அன்பு செழியன், கமல், முருகேசன், ஆனந்தன் உள்படபட பலர் கலந்து கொண்டனர்.

### திராவிட மாடல் ஆட்சியில் செய்துள்ள

# திட்டங்கள் - சாதனைகள் குறித்து மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்!

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் – மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்,எஸ்,கே,ரமேஷ் ராஜ் சிறப்புரை!

திருவள்ளூர் ஜன 26;

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, தொகுதி பார்வையாளர் சுரேஷ் செல்வராஜ், மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி. மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், வெ.அன்புவாணன். ஜி.ஸ்டாலின், பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பா.செ. குணாசேகர். பி.வெங்கடாசல பதி. டாக்டர் பரிமளம் விஸ்வநாதன். ஏ.வி.ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.டி.உதயசூரியன், வரவேற்புரை ஆற்றினார் இதில்

மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினர் அப்போது அவர் பேசும்போது,

திராவிட மாடல் அரசின் மகளிர் நலத்திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை, விடியல் பேருந்து, புதுமை பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழு போன்றவற்றை மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் கொண்டு சேர்த்தல் வேண்டும். பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கி ஆதரவு திரட்டவேண்டும்.

**தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை**

பிப்ரவரி 1முதல் பிப்ரவரி 28 வரை நடைபெறும் . இதில் நட்சத்திரப் பரப்புரையாளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் 4 இடங்களில் தெரு முனை கூட்டங்கள் அல்லது அரங்கக் கூட்டங்களாக பரப்புரை நடத்துவார்கள்.

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் பங்கேற்ற வேண்டும்.

மார்ச் 8ல் திருச்சியில் நடைபெறும் ஸ்டாலின் தொடரட்டும்: தமிழ்நாடு வெல்லட்டும் மாபெரும் மாநில மாநாட்டில் திரு வள்ளூர் கிழக்கு மாவட்ட திமுகவினர் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் அறிக்கை குழு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு வரும் பிப்ரவரி 14 ஆம் தேதி வருகை தர உள்ளது. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் பயணத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோரைச் சந்திக்க ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும் என்று அவர் கூறினார்.

மேலும் தேர்தல் நேரத்தில் செய்ய வேண்டிய பணிகள், வியூகங்கள், திராவிடமாடல் ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு செய்துள்ள திட்டங்கள், சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும், மூன்று மாத காலத்திற்கு கண் துஞ்சாது அயராது பாடுபட்டு மீண்டும் திமுக ஆட்சி அமைய கடுமையாக உழைக்க வேண்டும் என்று அவர் நிர்வாகிகளுக்கு ஆலோசனை கூறினார்.

கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் செயலாளகள் டி. கே.சந்திரசேகர். கி.வேணுஆனந்த், மு.மணிபாலன், ஆ. சத்தியவேலு, நா.செல்வசேகரன், ஜான்பொன்னுசாமி, மு.முரளிதரன், வே.ஆனந்தகுமார், க.சு.ஜெகதீசன். ஜி. ரவிக்குமார். அபிராமிகுமரவேல். இரா.அறிவழகன். க.சு.தமிழ்உதயன், வல்லூர் பா.து.தமிழரசன், வெற்றி, க.சம்பத், ரமேஷ், ஆறுமுகம், சுமன், எம்.டி.ஜி.கதிர்வேலு, எல்லாபுரம் ராஜேஷ், ம.தீபன், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

முடிவில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆ. ராஜா நன்றி கூறினார்.




தாம்பரம் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகரம், பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49,வது வட்டத்தில் 4ஆவது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ் தலைமையில் நடைபெற்ற திராவிட சமத்துவ பொங்கல் விழாவில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கலந்து கொண்டு கோலப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தி பேசினார். உடன் கி. வேல்மணி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், பகுதி அவைத்தலைவர் மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, பகுதி துணை செயலாளர்கள் ஜா.ரவிகுமார், ஆர்.செல்வகுமார், ச.இராஜேஷ், எஸ்.கார்த்திக், ர.அகஸ்டின், ஆர்.ஜீவன், ஜி.ஸ்ரீதர் பாபு, ஆர்.சினா, இ.குமார், விக்டர் சார்லஸ், எஸ்.ரமேஷ், பி.எம்.வினோத், எஸ். கார்த்திக், க.மு.சூரியா, இ.சதிஷ், குருமணி, இ.நவீன்குமார், கோ.ராஜேந்திரன், சரஸ்வதி, அரவிந்த் உள்ளிட்ட கழக முன்னணியினர் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அவசர ஆலோசனை கூட்டம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, தொகுதி பார்வையாளர் சுரேஷ் செல்வராஜ், மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி. மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், வெ.அன்புவாணன். ஜி.ஸ்டாலின், பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பா.செ.குணாசேகர். பி.வெங்கடாசலபதி. டாக்டர் பரிமளம் விஸ்வநாதன். ஏ.வி.ராமமூர்த்தி உள்பட ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் – அரசின் சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் திருவுருவப் படங்களுக்கு மரியாதை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து மலர் தூவினார்!

சென்னை, ஜன.26

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் நேற்று (25.1.2026) தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி காந்தி மண்டபம் வளாகத்தில் அமைந்துள்ள மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில் தியாகிகளை நினைவு கூரும் வகையில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்திய பின்பு, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

கடந்த காலத்தில் தமிழ் நாட்டு மக்கள் மீது இந்தி திணிப்பு நடைபெற்றது. அதையொட்டி எங்கும் இல்லாத அளவில் தமிழ்நாட்டில் உயிர் தியாகம் செய்த தியாகிகளுக்கெல்லாம் மரியாதை செய்கின்ற வகையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பிலும், அதேபோல் திராவிட முன்னேற்ற கழகம் போன்ற மாபெரும் இயக்கத்தின் சார்பிலும் ஜனவரி 25 ஆம் நாளினை வீரவணக்கம் நாள் என்கிற வகையில் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு உயிர் நீத்த தியாகிகள் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோர்களுக்கு அவர்களுடைய தியாகத்தைப் போற்றுகின்ற வகையில் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள சென்னை மூலக்கொத்தளம் மைதானத்தில் அவர்களுக்கென நினைவு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவுடன் நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாநகராட்சியின் ஒத்துழைப்புடன் அங்கு செயல்படுத்தப்பட்டது.

அந்த வகையில், முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அதை திறந்து வைத்து அங்கே மலர் மரியாதை செலுத்தினார். இந்த ஆண்டும் இன்றைக்கு அங்கு இரண்டாவது முறையாக மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோர்களின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்கள்.

அதற்கடுத்து அவர்களுக்கான திருவுருவச் சிலையை சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அலுவலகத்தில் மார்பளவு சிலையை இரண்டும் திறக்கப்படும் என்று சொல்லியிருந்தார். அதை நிறைவேற்றக்கூடிய வகையில் இன்று காலையில் அந்த இரண்டு திருவுருவச் சிலைகளையும் திறந்து வைத்தார்கள்.

அதற்கடுத்து, மூன்றாவது நிகழ்ச்சியாக சென்னை, கிண்டி காந்தி மண்டபத்தில் அமைந்துள்ள மொழிப்போர் தியாகிகள் அரங்கத்தில் மாவட்ட அளவில் தியாகங்களை செய்திருக்கக்கூடிய அந்த தியாகிகளின் புகைப்படங்களையெல்லாம் இங்கு வைக்கப்பட்டிருக்கிறது. தந்தை பெரியாரில் தொடங்கி இன்றைக்கு சாதாரண பாமர மக்கள் கூட தியாகம் செய்திருந்தால், அவர்களுக்கும் அந்தந்த மாவட்டத்தின் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறது.

அவர்களுக்கு இங்கே இன்றைக்கு நானும் மருத்தும் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், அதே போல் மேயர், துணை மேயர், அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர், தமிழ் வளர்ச்சி துறை இயக்குநர், செய்தித் துறை இயக்குநர் போன்ற அதிகாரிகள் எல்லாம் கலந்து கொண்டு துறைகளின் சார்பில் மரியாதை செய்யப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், இந்த அரசு வந்த பிறகு முதன்முறையாக இந்த அரங்கத்திற்கு முதலமைச்சர் அவர்களே வந்து மலர் மரியாதை செய்தார்கள். அதையொட்டி இன்றைக்கு நாங்கள் தொடர்ந்து அதையெல்லாம் பின்பற்றி வருகிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

கேள்வி :- இந்தி திணிப்பு குறித்து...

அமைச்சர் பதில்:- தொடர்ந்து இடையிடையே ஒன்றிய அரசு தமிழ் மீது நடத்தக்கூடிய வகையில் நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மீது தாக்குதல் நடத்தக்கூடிய வகையில், திணிப்பு என்பதைதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும்சரி, முத்தமிழறிஞர் அய்யா காலத்திலும் சரி, இன்றைய நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அதே போல், துணை முதலமைச்சர் அவர்களும் திணிப்பை தான் நாங்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறோம் என்கிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அதை பின்பற்றிக் கொண்டு வருகிறோம்.

எனவே, கட்டாயப்படுத்துவது, விரும்பக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் இந்தியோ, மற்ற மொழிகளைப் பற்றி பயில்வதைப் பற்றியோ, கற்பதைப் பற்றியோ எங்களுக்கு எந்தவித தயக்கமும் இல்லை. அதில் மாறுபட்ட கருத்தும் இல்லை. எனவே, திணிக்கக் கூடாது என்பதுதான்.

கேள்வி:- மகாத்மா காந்தி வேலை வாய்ப்பு உறுதி திட்டம் குறித்து...

அமைச்சர்:- வழக்கமாக, மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதிகள் கல்வித் துறையாக இருந்தாலும் சரி, அதேபோல் மகாத்மா காந்தி அவர்களின் பெயரிலான வேலை வாய்ப்பு உறுதித் திட்டமாக இருந்தாலும் சரி - ஏழை எளிய மக்கள், அதிலும் குறிப்பாக ஏறத்தாழ 80 சதவிகிதம் தாய்மார்கள் பணியாற்றக்கூடிய அந்த கிராமப்புறத்தில் பொருளாதாரத்தை நிலைநிறுத்தக்கூடிய ஒரு திட்டம், அற்புதமான திட்டம் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அன்றைக்கு இருந்த டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான அரசு அன்னை சோனியாகாந்தியின் வழிகாட்டலோடு அத்திட்டத்தை கொண்டுவந்தது. அதில் பெயரை மாற்றி இன்றைக்கு குழப்பதை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த திட்டத்தின் நாட்கள் இன்றைக்கு பெயரளவில் எண்ணிக்கை அதிகம் என்று சொல்லிவிட்டு, பங்குத் தொகையை மத்திய அரசும், மாநில அரசும் பகிர்ந்து செய்ய வேண்டும் என்று சொல்லி குழப்பதை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்காகதான் சிறப்புத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி பிரதமர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். எப்போது பார்த்தாலும் தமிழர்கள் மீதும் தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாடு மீதும் அவர்கள் ஆங்காங்கே கலாச்சார ரீதியாக தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதை வன்மையாக தொடர்ந்து கண்டித்து கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேட்டியளித்தார்.

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

# ஜாபர்கான்பேட்டையில் அறிஞர் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

## திருவுருவச் சிலைக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஜன.26

சைதை மேற்கு பகுதி 139 வது வட்டம் ஜாபர்கான் பேட்டை கெங்கையம்மன் கோயில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு 3.2.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில், பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில், மாவட்ட செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

மேலும் இந் நிகழ்ச்சியில் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணியன், தா.மோகன்குமார், எம்.எஸ்.ஹரிபாபு, டி.என். சிவமணி, த.சம்பத், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஆர். கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், ஜி.கே.ராமச்சந்தின், வீ.மதிவாணன், த. மணி, மு.கதிரவன், பொ. பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ. அயாத்பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதிவெங்கடேசன், சுமதி தீனதயாளன், ஜிம். பிரபு, கொடி.பாலா, சைதை எல்.சந்திரன், து.முரளி, சி.டி.காசிநாதன், வி.சபரி, அ.சுப்பிரமணி, இரா.சத்யா, எம்.அருண், ம.திலிப்பன், க.ரஞ்சித் மற்றும் பலர்கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டியை தலைமை பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.



மயிலை 171வது வட்ட துணைச் செயலாளர் மறைந்த எஸ்.இரவிச்சந்திரன் அவர்களின் 16 ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அன்னாரது திருவுருவப் படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். இதில் பகுதிச்செயலாளர் எஸ்.முரளி, வட்டச் செயலாளர் துரைபார்த்திபன், மாமன்ற உறுப்பினர் கீதா முரளி, வட்டப்பொறுப்பாளர் மா.பா.அன்பு, வேலு சம்பந்தம், ஆர்.பாலு, ஆர்.கதிரவன், எஸ். சரவணன், சி.கணேஷ்பாண்டியன், இர.சந்தோஷ்குமார், இர.சேஷாத்திரி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.